முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## திறமை (திறன்கள்) கப்ஸ்ரோன் - 2018 சனவரி

# (SS2) தகவல் தொழில்நுட்பவியல் திறன்கள்

(Information Technology skills)

2018-01-27
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(1) ***வினாத்தாள் கட்டமைப்பும் புள்ளிகள் ஒதுக்கீடும் :***

| பகுதி | தேவைப்பாடு | புள்ளிகள் |
|---|---|---|
| **A** | சகல வினாக்களும் கட்டாயமானவை | 40 |
| **B** | ஆறு வினாக்களில் நான்கிற்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். | 60 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

(2) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்குப் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** வங்கி ஊழியர் ஒருவர் சிறுவர்களுக்கான விசேட சேமிப்புக் கணக்கொன்று தொடர்பான தகவல் களைக் களஞ்சியப்படுத்துவதற்கு (store) மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (Microsoft Access) 2016 இனைப் பயன்படுத்தி தரவுத்தளம் (database) ஒன்றை உருவாக்குவதற்குத் திட்டமிடுகிறார். சிறுவன் ஒருவனது புகைப்படத்தைக் களஞ்சியப்படுத்த, பின்வருவனவற்றுள் மிகப் பொருத்தமான தரவு வகை (data type) எது?

(1) Yes/No. (2) Long Text. (3) Lookup Wizard. (4) Attachment.

**1.2** பின்வரும் பணிக்கூறுகளில் (functions) மைக்ரோசொப்ற் எக்செல் (Excel) இல் பயன்படுத்தப்படும் தருக்கமுறைப் பணிக்கூறாக (logical function) வகைப்படுத்தக்கூடிய பணிக்கூறு எது?

(1) Year function. (2) Date function. (3) Address function. (4) IF function.

**1.3** மின்னஞ்சல் (e-mail) ஒன்றை அனுப்பும்போது அதில் காணப்படுகின்ற “BCC” என்ற சுருக்கக்குறியீடு குறிப்பது :

(1) Binary Carbon Copy.
(2) Before Copying Certificate.
(3) Blind Carbon Copy.
(4) Broadcast Certificate Copy.

**1.4** இலங்கையிலுள்ள பெரும்பாலான வர்த்தக வங்கிகள் அவ்வங்கிகளில் கணக்கு வைத்திருப்போருக்கு இணைய வங்கி வசதிகளை (Internet banking facilities) வழங்குகின்றன. பின்வருவனவற்றுள் உள்நாட்டில் வழங்கப்படுகின்ற இணைய வங்கிச் சேவைகள் தொடர்பான **பிழையான** கூற்று எது?

(1) தனது தனிப்பட்ட கணினியைப் பயன்படுத்தி இணைய வங்கிச் சேவையை அணுகுவதற்கு வங்கியால் வழங்கப்படுகின்ற ஒரு விசேட மென்பொருள் (special software) எமக்கு எப்போதும் தேவைப்படும்.

(2) செல்லிடப்பேசி (mobile phone) ஊடாக இணைய வங்கிச் சேவையை அணுகுவதற்குப் பயன்படுத்தக்கூடிய செல்லிடப்பேசிச் செயலிகளைச் (Mobile Apps) சில வங்கிகள் கொண்டிருக்கின்றன.

(3) இணைய வங்கிச் சேவையைப் பயன்படுத்தி வங்கியின் அலுவலக நேரம் தவிர்ந்த (after office hours) ஏனைய நேரங்களிலும் எங்களது கணக்கு மீதிகளை எங்களால் பரிசோதிக்க முடியும்.

(4) அந்தரங்கமான (இரகசிய) தகவல்களின் பாதுகாப்பான பரிமாற்றங்களை உறுதிப்படுத்துவதற்காக, இணைய வங்கிச் சேவை HTTPS Protocol ஐப் பயன்படுத்துகிறது.

**1.5** பின்வருவனவற்றுள் மைக்ரோசொப்ற் வேட் (MS Word) இல் பயன்படுத்தப்படுகின்ற ஓர் உரை வடிவமைத்தல் அம்சம் (text formatting feature) ***அல்லாதது*** எது?

(1) Justify. (2) Bullet Lists. (3) Indenting. (4) Insert Object.

**1.6** பின்வருவனவற்றுள் மைக்ரோசொப்ற் பவர் பொயின்ட் (PowerPoint) இன் வில்லைகளுக்குப் (slides) பிரயோகிக்கக்கூடிய அம்சம் (feature) எது?

(1) Transition. (2) Superscript. (3) Justify. (4) Handout Master.

**1.7** ERP மென்பொருளொன்று, பின்வருவனவற்றுள் எதற்கு மிகவும் பிரயோசனமாக இருக்கும்?

(1) ஊழியர் ஒருவர் தனது மேற்பார்வையாளருக்கு மின்னஞ்சல் (email) ஒன்றை அனுப்புவதற்கு

(2) செயலாளர் ஒருவர் தனது முகாமையாளரால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றைத் தட்டச்சிடுவதற்கு

(3) ஊழியர் ஒருவர் தனது முகாமையாளருக்காக வாரமொன்றுக்குரிய உற்பத்தி விபரங்களைத் தயாரிப்பதற்கு

(4) முகாமையாளர் ஒருவர் சபைக் கூட்டமொன்றில் முன்வைக்கப்படும் தரவுகளைக் (presentation data) காட்சிப்படுத்துவதற்கு

**1.8** பின்வருவனவற்றுள் வருடாந்தப் பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) ஒன்றைப் பதிவுசெய்வதால் ஏற்படும் அனுகூலமாக அமைவது எது?

(1) தகைமைபெற்ற தொழினுட்பவியலாளர்களிடமிருந்து முழுநேர சேவை

(2) பொருட்களுக்கான திட்டமிடப்பட்ட சேவைகள்

(3) உயர் நம்பகத்தன்மைமிக்க உண்மையான உதிரிப் பாகங்கள்

(4) மேலுள்ள சகலதும்.

**1.9** பின்வருவனவற்றுள் தகவல் முறைமைகளுடன் பயன்படுத்தக்கூடிய தடுப்புப் பௌதிகக் கட்டுப்பாடு (preventive physical control) ஒன்றாக கருதப்படக்கூடியது எது?

(1) இரட்டைக் கதவு முறைமைகள் (Double Door Systems)

(2) பரீட்சார்த்தக் கணக்காய்வுகள் (Audit Trails)

(3) கடவுச்சொற்கள் (Passwords)

(4) குறிமுறையாக்கம் (Encryption)

**1.10** நிறுவனம் ஒன்றினுள் இணையம் பயன்படுத்தப்படுவதைக் கருத்திற்கொள்ளும்போது பின்வருவன வற்றுள் எதனை ஓர் ஒழுக்கநெறிசார்ந்த நடத்தையாகக் (ethical behavior) கருத முடியும்?

(1) டொரன்ற் கோப்பொன்றைப் (Torrent file) பயன்படுத்தி மைக்ரோசொப்ற் ஒப்பிஸ் (Microsoft Office) 2016 ஐத் பதிவிறக்கம் (Downloading) செய்தல்

(2) விண்டோஸ் அப்டேட் (Windows Update) இன் ஊடாக மைக்ரோசொப்ற் ஒப்பிஸ் இற்கான அப்டேட்களைப் (updates) பதிவிறக்கம் செய்தல்

(3) அலுவலக மேசைக் கணினியிலிருந்து உங்களுடைய தனிப்பட்ட முகநூல் (Facebook) கணக்கிற்கு ஒளிப்படங்களைத் (Photos) பதிவேற்றம் (Uploading) செய்தல்.

(4) சகல வாடிக்கையாளர்களினதும் கணக்கு சம்பந்தமான தகவல்களைக் கொண்ட மைக்ரோசொப்ற் எக்செல் வேலைத் தாளை (excel worksheet) சகல வாடிக்கையாளர்களுக்கும் மின்னஞ்சல் செய்தல்.

*இல. **1.11** தொடக்கம் **1.16** வரையான வினாக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல்லை, வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக:*

**1.11** மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (MS Access) இல் தரவு உள்ளீட்டுச் செயன்முறையின் உதவிக்காக ஒரு ………… *(படிவம் [form] / அறிக்கை [report])* ஐப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

**1.12** மைக்ரோசொப்ற் எக்செல் (MS Excel) இல் ………… *(அஞ்சல் இணைப்பு [mail merge] / மைய அட்டவணை [pivot table])* அம்சத்தைப் பயன்படுத்தி, பெரியளவான தரவுத்தொகுதி ஒன்றிலிருந்து பிரயோசனமான தகவல்களை எங்களால் பெற முடியும்.

**1.13** வடிவமைப்புச் செய்யப்பட்ட உரையினை (formatted text) பிரதிபண்ணும்போது எந்தவொரு வடிவமைப்புமின்றி உரையைக் காட்சிப்படுத்துவதற்கு மைக்ரோசொப்ற் வேட் (MS Word) இலுள்ள ………… *(paste special / insert text box)* அம்சத்தைப் பயன்படுத்த முடியும்.

**1.14** மைக்ரோசொப்ற் பவர்பொயின்டைப் பயன்படுத்தும்போது பார்வையாளர்கள் அவதானிக்காதவாறு முன்வைப்புச் செய்பவரால் (Presenter) வாசிக்கப்படக்கூடிய உரை (text) ஒன்றைச் சேர்ப்பதற்கான தேவை எங்களுக்கு ஏற்படும்போது………… *(Hide slide / Add notes)* அம்சம் பயன்படுத்தப்படுகிறது.

**1.15** பயனர் ஒருவருக்குச் சம்பந்தமற்றது என தன்னியக்கமாகவே அடையாளம் காணப்படும் மின்னஞ்சல்கள் பொதுவாக மின்னஞ்சல் முறைமையிலுள்ள ………… *(Spam / Trash)* இல் சேமிக்கப் படுகின்றன.

**1.16** ………… *(Google Chrome / Google Search)* என்பது இணைய வங்கிச் சேவையை அணுகுவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு வலை உலாவி (web browser) இற்கான ஓர் உதாரணம் ஆகும்.

*இல. **1.17** தொடக்கம் **1.20** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.17** வாடிக்கையாளர் தகவல்களைக் களஞ்சியப்படுத்துவதற்காகத் தரவுத்தளமொன்றை (database) வடிவமைக்கும்போது, தேவைப்படின் பல திகதிப் புலங்களை (multiple date fields) எங்களால் களஞ்சியப்படுத்த முடியும்.

**1.18** விரிதாள் (spreadsheet) ஒன்றிலுள்ள ஒரு நுண்ணறையில் (cell) சூத்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பணிக்கூறுகளை (functions) எழுத முடியும்.

**1.19** சொல் நிரலாக்கல் (word processing) மென்பொருள் ஒன்றில், பல பெறுநர்களுக்கான அஞ்சலிடல் லேபல்களைத் (mailing labels) தயாரிப்பதற்கு மெயில் மேர்ச் (mail merge) வசதியினைப் பயன்படுத்த முடியும்.

**1.20** முன்வைப்பு (presentation) மென்பொருள் ஒன்றில், படங்கள், இசை மற்றும் காணொளிகளை உட்புகுத்த முடியுமாயினும் மனிதனின் குரல் ஒலியினை (human voice) உட்புகுத்த முடியாது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

(மொத்தம் 60 புள்ளிகள்)

## வினா 02

(a) கல்வி நிறுவகமொன்று, தகவல் தொழினுட்பப் பாடத்திற்காக விண்ணப்பித்துள்ள மாணவர்களின் விபரங்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக எளிமையான மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (Microsoft Access) தரவுத்தளம் ஒன்றைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடுகிறது. மாணவர்களின் தரவுகள் எவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட வேண்டும் என்பதை கீழே தரப்பட்டுள்ள மாதிரி அட்டவணை விளக்குகிறது:

| பதிவு இலக்கம் | முதலெழுத்துக் களுடன் பெயர் | தே.அ.அ.இல. | பிறந்த திகதி | பதிவுத் திகதி | முகவரி |
|---|---|---|---|---|---|
| 451120 | சில்வா ஏ.எம். | 992352097 V | 1999/08/22 | 2017/11/01 | இல. 15,<br>காலி வீதி,<br>இரத்மலானை |
| 451121 | சுபைர் டபி.எம். | 992362099 V | 1999/08/23 | 2017/11/03 | இல. 5,<br>பிரதான வீதி,<br>அலவ்வ. |
| 451122 | கீதன் ஜி. | 992372097 V | 1999/08/24 | 2017/11/10 | 23/15,<br>விக்டோரியா ஒழுங்கை,<br>வெள்ளவத்தை. |

(i) தே.அ.அ. இலக்கத்தைக் (மேலே காட்டப்பட்டதன்படி) களஞ்சியப்படுத்தும்போது (store), அடையாள அட்டையிலுள்ள எழுத்து “V” ஆனது தன்னியக்கமாகவே உள்ளிடப்படுமாறு எவ்வாறு செயன்முறை ஒன்றை நெறிப்படுத்த (Streamlined) முடியும் என்பதை **விபரிக்குக.**

*(உள்ளிடப்படுகின்ற சகல தே.அ.அ. இலக்கங்களும் 9 எண்களைக் கொண்டுள்ளன என்றும் அவை “V” என்ற எழுத்துடன் முடிவடைகின்றன என்றும் நீங்கள் கருதிக்கொள்ளலாம்.)* (03 புள்ளிகள்)

(ii) பதிவுத் திகதி உள்ளிடப்படும் வேளையில், அது உள்ளிடப்பட்ட பிறந்த திகதியைக் காட்டிலும் பிந்தைய திகதியாக இருப்பின் மட்டும் அது அனுமதிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய முறை ஒன்றினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) தரவுகளைச் (data) களஞ்சியப்படுத்துவதற்கு, தரவுத்தளங்கள் (databases) தேவையில்லை எனவும் அவ்வேலையை விரிதாள்களைப் (spreadsheets) பயன்படுத்திச் செய்துமுடிக்கலாம் எனவும் உமது நண்பர் ஒருவர் உமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

(i) மேலே பகுதி (a) இல் தரப்பட்ட தகவல்களைக் கருத்திற் கொண்டு, உமது நண்பரின் ஆலோசனையை **நியாயப்படுத்துக.** (03 புள்ளிகள்)

(ii) உமது நண்பரின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளமுடியாத வேறொரு சந்தர்ப்பத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (Microsoft Access) உடன் தொடர்புபட்ட வினவல்கள் (Queries) மற்றும் அறிக்கைகள் (Reports) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 03

உற்பத்திக் கம்பனி ஒன்றின் ஊழியர்களது சம்பள விபரங்களை உள்ளடக்கிய மைக்ரோசொப்ற் எக்செல் விரிதாள் (MS Excel Spreadsheet) ஒன்றின் பிரித்தெடுப்பு கீழே காட்டப்பட்டுள்ளது:

| | A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | |
| 2 | | Employee Number | Name | Basic Salary | OT Hours | Service (Years) | OT Payment | Gross Salary | PAYE Tax | Net Salary |
| 3 | | 101 | A.B.C. Silva | 48,000 | 50 | 3 | | | | |
| 4 | | 102 | P. Ramanathan | 32,000 | 25 | 10 | | | | |
| 5 | | 103 | M. Razik | 64,000 | 10 | 7 | | | | |
| | | | | | | | | | | |

(a) நுண்ணறை (cell) G3 ஆனது =IF(F3<5,((D3/160)*1),((D3/160)*1.5)) என்னும் சூத்திரத்தைக் கொண்டிருக்கிறது. நுண்ணறை G3 இன் உள்ளடக்கம் (சூத்திரம்), நுண்ணறைகள் G4 மற்றும் G5 இற்குப் பிரதிபண்ணப்படுமாயின், நுண்ணறைகள் G4 மற்றும் G5 இல் காட்சிப்படுத்தப்படும் பெறுமதிகளைக் (values) **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தையும் (Basic Salary) மேலதிக நேரக் கொடுப்பனவையும் (OT Payment) கூட்டி அவ்வூழியரின் மொத்தச் சம்பளம் (Gross Salary) பெறப்படுவதாகக் கருதி, ஊழியர் இலக்கம் (employee Number) 101 இனைக் கொண்ட ஊழியருக்கான மொத்தச் சம்பளத்தைக் (நுண்ணறை H3) கணிப்பிடுவதற்கான சூத்திரத்தை **அடையாளங் காண்க.** அத்துடன் நுண்ணறை H3 இல் காட்சிப்படுத்தப்படும் பெறுமதியையும் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) உ.பொ.செ. வரி (PAYE Tax) ஆனது மொத்தச் சம்பளத்தில் 10% ஆகக் கணிப்பிடப்படுவதாகக் கருதி, ஊழியர் இலக்கம் 101 இனைக் கொண்ட ஊழியருக்கான உ.பொ.செ. வரியினைக் (நுண்ணறை I3) கணிப்பிடுவதற்கான சூத்திரத்தை **அடையாளங் காண்க.** அத்துடன் நுண்ணறை I3 இல் காட்சிப்படுத்தப்படும் பெறுமதியையும் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) மொத்தச் சம்பளத்திலிருந்து உ.பொ.செ. வரியைக் கழிப்பதன் மூலம் ஊழியரின் நிகரச் சம்பளம் (Net Salary) பெறப்படுவதாகக் கருதி, ஊழியர் இலக்கம் 101 இனைக் கொண்ட ஊழியருக்கான நிகரச் சம்பளத்தைக் (நுண்ணறை J3) கணிப்பிடுவதற்கான சூத்திரத்தை **அடையாளங் காண்க.** அத்துடன் நுண்ணறை J3 இல் காட்சிப்படுத்தப்படும் பெறுமதியையும் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 04

வேறு கம்பனிகளுக்கு வியாபார மற்றும் தகவல் தொழினுட்ப சேவைகளை வழங்குகின்ற ஓர் இலங்கைக் கம்பனியான **Business IT (Pvt) Ltd.** இன் கணக்காளர் நீங்கள் எனக் கருதிக்கொள்க. உமது கம்பனி, பிரித்தானிய ஆலோசனைக் கம்பனியான **Jazz** உடன் வியாபாரச் செயன்முறை வெளிமூலமிடல் (Business Process Outsourcing - BPO) முயற்சி ஒன்று தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துகின்றது.

**Jazz** கம்பனியின் நிதிப் பணிப்பாளரால் உமக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| From: | dirfinance@jazz.co.uk |
| To: | accountant@businessit.lk |
| CC: | ceo@jazz.co.uk, |
| Subject: | BPO partnership proposal |
| Message: | அன்பின் திரு. விகும் லியனகே அவர்கட்கு,<br><br>நேற்றைய எமது தொலைபேசி உரையாடலுக்கு மேலதிகமாக, எம்மால் முன்மொழியப்பட்ட முயற்சிக்குச் சாத்தியமான கிரய வகைகளையும் மதிப்பீடு களையும் உள்ளடக்கிய மைக்ரோசொப்ற் எக்செல் வேலைத்தாளொன்றை (Excel worksheet) இத்துடன் அனுப்புகிறேன். **Jazz** கம்பனி உறிஞ்சக்கூடிய கிரய வகைகளையும்கூட அதில் குறிப்பிட்டுள்ளேன். தயவுசெய்து இந்தக் கோப்பினைப் பார்த்து **Business IT (Pvt) Ltd.** முதலீடு செய்யும் பகுதியினைப் பூரணப்படுத் துங்கள். உங்களுடைய கம்பனி வருமானப் பகிர்வு மாதிரிக்கா அல்லது இலாபப் பகிர்வு மாதிரிக்கா முன்னுரிமை வழங்குகிறது என்பதையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.<br><br>நன்றி.<br><br>இப்படிக்கு உண்மையுள்ள,<br><br>ஜோன். |
| Signature: Text | ஜோன் சிமோன்ஸ்<br><br>நிதிப் பணிப்பாளர், Jazz நிறுவனச் சேவைகள்,<br>5A, மீடவுஸ் பார்க், இலண்டன் EC1A, ஐக்கிய இராச்சியம்.<br><br>தொலைபேசி: +44 123 456 7890 |
| Attachments: | costshare.xls |

உங்களுக்குப் பின்வரும் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

**Business IT (Pvt) Ltd.** இன் தொடர்பு விபரங்கள் – இல. 5, காலி வீதி, கொழும்பு 6,
தொலைபேசி/தொலைநகல் : +94 112 345 678.

**Jazz** கம்பனியின் நிதிப் பணிப்பாளரால் அனுப்பப்பட்ட மின்னஞ்சலுக்கு பதிலளிப்பதற்காக, பின்வரும் செய்தியை அவருக்கு வழங்கும் பொருட்டு, மின்னஞ்சல் அனுப்புவது தொடர்பான உமது அறிவினைப் **பிரயோகிக்குக.** கம்பனிக் கொள்கைக்கிணங்க, **Business IT (Pvt.) Ltd.** இன் ஊழியர்களால் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படுகின்ற சகல மின்னஞ்சல்களும், கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளரின் மின்னஞ்சலான md@businessit.lk இற்கும் பிரதியிடப்படுதல் (அனுப்பப்படுதல்) வேண்டும்.

கீழே (a) தொடக்கம் (h) வரை குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்குப் பொருத்தமான தகவல்களை எழுதுக. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் (a) தொடக்கம் (h) வரை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி அவற்றுக்கு எதிரே உங்களது விடைகளை எழுதுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| From: | ............... (a) ........................ | (02 புள்ளிகள்) |
| To: | ................ (b) ........................ | (02 புள்ளிகள்) |
| CC: | ................ (c) ........................ | (03 புள்ளிகள்) |
| Subject: | ................ (d) ........................ | (02 புள்ளிகள்) |
| Message: | அன்பின் திரு. **...........** (e) .................<br>உங்களது மின்னஞ்சலுக்கு நன்றி. நான் உங்களது முன்மொழிவை ஆராய்ந்து, எங்களது இறுதி முடிவுடன் நாளை உங்களைத் தொடர்பு கொள்ள எதிர்பார்க்கிறேன். அதே வேளை, முன்மொழியப்பட்ட MOU இற்கான வரைவு (draft text) ஒன்றினை மைக்ரோசொப்ற் வேட் (MS Word) ஆவணமாக இத்துடன் அனுப்புகிறேன்.<br>இப்படிக்கு உண்மையுள்ள,<br>................ (f) ........................ | (01 புள்ளி)<br><br>(01 புள்ளிகள்) |
| Signature: Text | ................ (g) ........................ | (02 புள்ளிகள்) |
| Attachments | ................ (h) ........................ | (02 புள்ளிகள்) |

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 05

(a) இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனியில் நீங்கள் பணிபுரிவதாகக் கருதிக்கொள்க. உமது வழங்குநர்களில் ஒருவர், 5,000 கிலோகிராம் இரசாயனப் பொருளைக் கொண்ட 20 அடி நீள கொள்கலன் ஒன்றிற்கு 15,000 அமெரிக்க டொலர்கள் என்ற விலைமனுக் கோரிக்கையுடன் (quoted price) மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ளார். இலங்கை ரூபாய்களில் விலையை மதிப்பிடுவதற்கான பொறுப்பு உங்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இணையத்தைப் பயன்படுத்தி, செல்லுபடியானதொரு இலங்கை மூலத்திலிருந்து (source) இம்மதிப்பீட்டினை எவ்வாறு உம்மால் பெற்றுக்கொள்ள முடியுமென **விபரிக்குக.**

*(உங்களிடம் வலை உலாவியுடன்கூடிய (web browser) கணினி ஒன்று இருப்பதாகவும் உங்களுக்கு எந்தவொரு உள்நாட்டு நிறுவனங்களின் இணையத்தள முகவரியும் (website address) தெரியாது எனவும் கருதிக்கொள்க.)* (04 புள்ளிகள்)

(b) “வைபர் (Viber)” மற்றும் “வட்ஸ்அப் (Whatsapp)” ஆகியன இந்நாட்களில் பலராலும் பயன்படுத்தப்படுகின்ற பிரபலமான இரு செல்லிடப்பேசிச் செயலிகள் (mobile applications) ஆகும்.

(i) செல்லிடப்பேசிச் செயலிகளைக் கருத்திற்கொள்ளும்போது, வைபர் மற்றும் வட்ஸ்அப் என்பன எந்த வகையினுள் அடங்குகின்றன என்பதை **அடையாளம் காண்க.** (02 புள்ளிகள்)

(ii) செல்லிடப்பேசி ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தவிர இச்செயலிகளைப் பயன்படுத்தத் தேவையான வேறு ஏதாவது தேவைப்பாடுகளைக் (requirements) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)


(iii) இந்தச் செயலிகளால் ஆற்றப்படும் பணிகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) இணைய வங்கிச் சேவையை வழங்குதல் தற்போது பயன்மிக்கதொன்றாகக் கருதப்படுகிறது. “தகவல்களை மோசடியாகப் பெறுதல் (phishing)” என்பதால் கருதப்படுவது யாது என்பதையும், அது இணைய வங்கிச் சேவைப் பாவனையாளர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 06

**Supipi நிறுவகத்தின்** ஒன்றுகூடல் நிகழ்வுக்கான அழைப்பிதழ் ஒன்றை வடிவமைக்கும் பணி உம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கருதுக. மூல ஆவணம் கொண்டுள்ள உரை மற்றும் உருவை (text and image) கீழே தரப்பட்டுள்ள படம் காட்டுகிறது:



Invitation

You are cordially invited for the annual get-together of the

Supipi Institute

On 25th January 2018, 6pm onwards

At

Hotel Azure
155, Galle Road, Colombo 06

RSVP (Regrets Only)

கீழே தரப்பட்டுள்ள படம் இறுதியாக வடிவமைக்கப்பட்ட (formatted) அழைப்பிதழைக் காட்டுகிறது:

Invitation

You are cordially invited for the annual get-together of the

**SUPIPI INSTITUTE**

On 25th January 2018, 6pm onwards

At

**HOTEL AZURE**

155, Galle Road, Colombo 06

RSVP (*Regrets Only*)
0777 123456

*எழுத்துரு வகை (Font type) மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதி,* மூல ஆவணத்தில் காணப்பட்ட பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றையும் மாற்றியமைப்பதற்குப் (to convert) பயன்படுத்த வேண்டிய மைக்ரோசொப்ற் வேட் *(MS Word)* இலுள்ள அம்சங்களை *(features)* விபரிக்குக.

(a) “Invitation” என்று பெயரிடப்பட்ட உருவின் அளவைக் (size) குறைத்தல் (02 புள்ளிகள்)

(b) “You are cordially invited for the annual get-together of the” என்ற வசனத்தின் இடவமைவினை (position) மாற்றுதல் (02 புள்ளிகள்)

(c) “Supipi Institute” என்ற வசனத்தின் தோற்றத்தையும் (appearance) இடவமைவையும் (position) மாற்றுதல். (02 புள்ளிகள்)

(d) “On 25th January 2018, 6pm onwards” என்ற வசனத்தின் தோற்றத்தையும் இடவமைவையும் மாற்றுதல். (02 புள்ளிகள்)

(e) “Hotel Azure” என்ற வசனத்தின் தோற்றத்தையும் இடவமைவையும் மாற்றுதல். (02 புள்ளிகள்)

(f) “RSVP (Regrets Only)” என்ற வசனத்தின் தோற்றத்தையும் இடவமைவையும் மாற்றுதல். (02 புள்ளிகள்)

(g) வடிவமைக்கப்பட்ட (formatted) படத்தில் உள்ளவாறு, அழைப்பிதழைச் சுற்றி கோடு வரைதல்
(03 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 07

(a) மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் (PowerPoint) இலுள்ள பின்வரும் அம்சங்களால் ஆற்றப்படும் பணிகளை **விபரிக்குக**:

(i) Action Buttons.

(ii) Slide Master.

(iii) Rehearse Timings.

(iv) Hide Slide.

(v) Slide Size (4:3 and 16:9).

(vi) Presenter View. (ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 12 புள்ளிகள்)

(b) பல்தேசியக் கம்பனி ஒன்றினால் விருப்பறிவிப்புச் செய்யப்பட்ட (offered) நிருமாணச் செயற்றிட்டம் ஒன்றிற்காக உமது கம்பனி விலைமனுச் (bidding) செய்கிறது. பல்தேசியக் கம்பனியின் பணிப்பாளர் சபைக்காக விலைமனு பற்றிய மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் முன்வைப்பு (Power Point presentation) ஒன்றைத் தயாரிப்பதற்கான பொறுப்பை உமது CEO உம்மிடம் ஒப்படைத்திருக்கிறார். அதில் அந்தரங்கமான தரவுகள் காணப்படுவதால் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி CEO ஐயும் உம்மையும் தவிர வேறு எவரும் அந்த முன்வைப்பினைத் திறக்க முடியாதவாறு செய்யுமாறு உமது CEO உமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மைக்ரோசொப்ற் பவர்பொயின்டைப் பயன்படுத்தி இத்தேவையினை (requirement) எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*